பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 03 2026 FRIDAY 6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** சமையல் எரிவாயு உற்பத்தி **30** சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

**2)** சர்வதேச விவகாரங்களில் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் நாட்டு நலனை கருத்தில்கொண்டே இருக்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

**3)** தமிழகத்தில் கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் **24** லட்சம் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**4)** தென் தமிழக கடலோர மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5)** உலக பாரா கிராண்ட்பிரி தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஆறு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>

சமையல் எரிவாயு உற்பத்தி 30 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பெட்ரோலியத்துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா சர்மா, சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் சீராக உள்ளதாக கூறினார்.

பெட்ரோலியப் பொருட்கள் போதிய அளவு கையிருப்பில் உள்ளதால் பொதுமக்கள் பதற்றமடையத் தேவையில்லை என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேற்காசிய பிரச்சினை காரணமாக சமையல் எரிவாயு முன்பதிவு செய்வது சராசரியைவிட 20 லட்சம் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்கள் தேவையின்றி முன்பதிவு செய்வதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகமும் சீராக நடைபெற்று வருவதாக திருமதி சுஜாதா சர்மா தெரிவித்தார்.

இதற்கிடையே, தமிழகத்தில் உள்ள பெட்ரோல் விற்பனை மையங்கள் அனைத்தும், போதிய அளவு பெட்ரோல் மற்றும் டீசல் கையிருப்புடன் செயல்பட்டு வருவதாக ஐ ஓ சி கூறியுள்ளது.

தேவையின்றி கூடுதலாக எரிபொருளை வாங்கி சேமித்து வைப்பதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்றும் ஐ ஓ சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் கேன்கள், பாட்டீல்கள் மற்றும் அனுமதி பெறாத பாத்திரங்களில் பெட்ரோலை சேமித்து வைப்பது போன்ற பாதுகாப்பற்ற செயல்களை பொதுமக்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் தடையின்றி தொடர்ந்து கிடைக்கும் என்றும் ஐ ஓ சி திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு நிலவுவதாக எதிர்க்கட்சிகள் வதந்திகளை பரப்பி வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சமையல் எரிவாயு தட்டுப்பாடு இல்லை என்று பயனாளிகள் தெரிவிக்கும் காணொலியையும் பகிர்ந்துள்ளார்.

பொதுமக்களை பதற்றமடைய வைக்க எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்த காணொலி உரிய பதிலடி கொடுத்துள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

சர்வதேச விவகாரங்களில் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் நாட்டு நலனை கருத்தில்கொண்டே இருக்க வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று மக்களவையில் துணை நிதி ஒதுக்க மசோதா மீதான விவாதத்துக்கு பதிலளித்து அவர் பேசினார்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கென நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டு மக்களுக்கு எவ்வித சிரமும் ஏற்படக்கூடாது என்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி ஓய்வின்றி பணியாற்றி வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் பள்ளி மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த வழக்கில் குற்றவாளியை கண்டறிய முடியவில்லை என்பது, திமுக அரசு காவல்துறையை எந்த அளவுக்கு சீரழித்துள்ளது என்பதை எடுத்துரைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தூத்துக்குடி மாணவிக்கு உரிய நீதி கிடைப்பதை அஇஅதிமுக உறுதி செய்யும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தில் திமுக அரசின் விளக்கங்களை பொதுமக்கள் நம்பத் தயாராக இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

திமுக துணைப் பொதுச்செயலாளரை அப்பகுதி மக்கள் விரட்டி அனுப்பியதே இதற்கு சாட்சி என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திமுக ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர் குற்றங்கள் குறைந்துவிட்டதாக அதிகாரிகளை வைத்து தவறான புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக குறை கூறியுள்ளார்.

இதுபோன்ற நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபடுவது தவறானது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்ட புள்ளிவிவரங்கள் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதை எடுத்துரைத்துள்ளதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் கடந்த ஐந்து வருடங்களில் மட்டும் 24 லட்சம் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று தருமபுரியில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

இந்த மாவட்டத்தில் மட்டும் 46 ஆயிரம் பேருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அரசாக திமுக அரசு திகழ்கிறது என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

<<<<<>>>>>

திருநெல்வேலியில் போதைப்பொருட்களை விற்பனை செய்வோர் மீது குண்டர் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகர காவல்துறை ஆணையாளர் திரு தேஷ்முக் சேகர் சஞ்சய் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - தேஷ்முக் — 58 Sec. )*

<<<<<>>>>>

தென் தமிழக கடலோர மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 45 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, வண்ணக்கோலங்கள் வரைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

---------------

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் அரசு மருத்துவமனையில் ஆட்சியர் திருமதி சினேகா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------------

தென்காசி மாவட்டத்தில் மகளிர் உரிமைத் தொகை கிடைக்கவில்லை என்று கூறி, 100-க்கும் மேற்பட்டோர் ஆட்சியர் திரு கமல்கிஷோரிடம் மனு அளித்தனர்.

---------------

நாமக்கல் மாவட்டத்தில் நுகர்வோர் உரிமைகள் தின விழா ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

----------------

வேலூர் மாவட்டத்தில் ஏரியை புனரமைத்து **19** கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா தலத்தை ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி இன்று திறந்துவைத்தார்.

-----------------

சென்னை எழும்பூர் — செங்கோட்டை இடையேயான பொதிகை விரைவு ரயில் வரும் **17-**ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் **6-**ஆம் தேதிவரை தாம்பரத்தில் இருந்து புறப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதேபோல், திருநெல்வேலி — சென்னை இடையேயான நெல்லை விரைவு ரயில் வரும் **16-**ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் **5-**ஆம் தேதிவரை தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா கிராண்ட்பிரி தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா ஆறு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **400** மீட்டர் ஓட்டப்பிரிவுகளில் **Mohit Pal, Bhavikkumar Bharwad, Subodh Bhatt** மற்றும் **Manoj Kumar Sabapathi** தங்கப்பதக்கம் வென்றனர்.

மகளிர் குண்டு எறிதல் பிரிவில் லஷ்மியும், ஆடவர் ஈட்டி எறிதலில் சுனில் குமாரும் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் **400** மீட்டர் ஓட்டப்பிரிவுகளில் **Priyanshu Kaushik-**க்கும், **Jasbeer-**ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

இப்பிரிவில் **Avnil Kumar-**க்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

----------------

உலகக்கோப்பைக்கான தகுதி சுற்று மகளிர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இத்தாலியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி **7.30-**க்கு தொடங்குகிறது.

-------------

கொல்கத்தா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-7, 6-3, 7-5 என்ற செட் கணக்கில், யுக்ரைனின் Yurii Dzhavakian -ஐ வென்றார்.**

**<<<<<END>>>>>**